ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 3.5 – அட்டுக்குவி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 3.5 – அட்டுக்குவி

‡ அட்டுக் குவி சோற்றுப் பருப்பதமும் ⋆
தயிர் வாவியும் நெய் அளறும் அடங்கப் பொட்டத் துற்றி ⋆
மாரிப் பகை புணர்த்த ⋆
பொரு மா கடல்வண்ணன் பொறுத்த மலை ⋆
வட்டத் தடங்கண் மட மான் கன்றினை ⋆
வலைவாய்ப் பற்றிக் கொண்டு ⋆
குறமகளிர் கொட்டைத் தலைப் பால் கொடுத்து வளர்க்கும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ॥ **3.5.1** ॥

வழுவொன்றும் இலாச் செய்கை வானவர் கோன் ⋆
வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட ⋆
மழை வந்தெழு நாள் பெய்து மாத் தடுப்ப ⋆
மதுசூதன் எடுத்து மறித்த மலை ⋆
இழவு தரியாததோர் ஈற்றுப் பிடி ⋆
இளஞ்சீயம் தொடர்ந்து முடுகுதலும் ⋆
குழவி இடைக் கால் இட்டெதிர்ந்து பொரும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ॥ **3.5.2** ॥

அம் மைத் தடங்கண் மட ஆய்ச்சியரும் ⋆
ஆனாயரும் ஆநிரையும் அலறி ⋆
எம்மைச் சரண் ஏன்று கொள் என்றிரப்ப ⋆
இலங்காழிக் கை எந்தை எடுத்த மலை ⋆
தம்மைச் சரண் என்ற தம் பாவையரைப் ⋆

புனமேய்கின்ற மானினம் காண்மின் என்று ⋆
கொம்மைப் புயக் குன்றர் சிலை குனிக்கும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ॥ **3.5.3** ॥

கடு வாய்ச் சின வெங்கண் களிற்றினுக்குக் ⋆
கவளம் எடுத்துக் கொடுப்பான் அவன் போல் ⋆
அடிவாய் உறக் கையிட்டெழப் பறித்திட்டு ⋆
அமரர் பெருமான் கொண்டுநின்ற மலை ⋆
கடல்வாய்ச் சென்று மேகம் கவிழ்ந்திறங்கிக் ⋆
கதுவாய்ப் பட நீர்முகந்தேறி ⋆
எங்கும் குடவாய்ப் பட நின்று மழை பொழியும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ॥ **3.5.4** ॥

வானத்தில் உள்ளீர் ! வலியீர் உள்ளீரேல் ⋆
அறையோ ! வந்து வாங்குமின் என்பவன் போல் ⋆
ஏனத்துருவாகிய ஈசன் எந்தை ⋆
இடவன் எழ வாங்கி எடுத்த மலை ⋆
கானக் களி யானை தன் கொம்பிழந்து ⋆
கதுவாய் மதம் சோரத் தன் கை எடுத்து ⋆
கூனல் பிறை வேண்டி அண்ணாந்து நிற்கும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ॥ **3.5.5** ॥

செப்பாடுடைய திருமால் அவன் தன் ⋆
செந்தாமரைக் கைவிரல் ஐந்தினையும் ⋆
கப்பாக மடுத்து மணி நெடுந் தோள் ⋆
காம்பாகக் கொடுத்துக் கவித்த மலை ⋆
எப்பாடும் பரந்திழி தெள் அருவி ⋆
இலங்கு மணி முத்து வடம் பிறழ ⋆

குப்பாயம் என நின்று காட்சி தரும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ‖ **3.5.6** ‖

படங்கள் பலவும் உடைப் பாம்பரையன் ⋆
படர் பூமியைத் தாங்கிக் கிடப்பவன் போல் ⋆
தடங்கை விரல் ஐந்தும் மலர வைத்துத் ⋆
தாமோதரன் தாங்கு தடவரை தான் ⋆
அடங்கச் சென்றிலங்கையை ஈடழித்த ⋆
அனுமன் புகழ் பாடித் தம் குட்டன்களை ⋆
குடங்கைக் கொண்டு மந்திகள் கண் வளர்த்தும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ‖ **3.5.7** ‖

சல மா முகில் பல் கணப் போர்க் களத்துச் ⋆
சர மாரி பொழிந்தெங்கும் பூசல் இட்டு ⋆
நலிவான் உறக் கேடகம் கோப்பவன் போல் ⋆
நாராயணன் முன் முகம் காத்த மலை ⋆
இலைவேய் குரம்பைத் தவ மா முனிவர் ⋆
இருந்தார் நடுவே சென்றணார் சொறியக் ⋆
கொலை வாய்ச் சின வேங்கைகள் நின்றுறங்கும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ‖ **3.5.8** ‖

வன் பேய்முலை உண்டதோர் வாய் உடையன் ⋆
வன் தூண் என நின்றதோர் வன் பரத்தை ⋆
தன் பேர் இட்டுக் கொண்டு தரணி தன்னில் ⋆
தாமோதரன் தாங்கு தடவரை தான் ⋆
முன்பே வழி காட்ட முசுக் கணங்கள் ⋆
முதுகில் பெய்து தம் உடைக் குட்டன்களை ⋆

கொம்பேற்றியிருந்து குதி பயிற்றும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ॥ **3.5.9** ॥

கொடி ஏறு செந் தாமரைக் கைவிரல்கள் ⋆
கோலமும் அழிந்தில வாடிற்றில ⋆
வடிவேறு திருவுகிர் நொந்தும் இல ⋆
மணிவண்ணன் மலையும் ஓர் சம்பிரதம் ⋆
முடி ஏறிய மா முகில் பல் கணங்கள் ⋆
முன் நெற்றி நரைத்தன போல ⋆
எங்கும் குடியேறி இருந்து மழை பொழியும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே ॥ **3.5.10** ॥

‡ அரவில் பள்ளி கொண்டரவம் துரந்திட்டு ⋆
அரவப் பகை ஊர்தி அவனுடைய ⋆
குரவில் கொடி முல்லைகள் நின்றுறங்கும் ⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடைமேல் ⋆
திருவில் பொலி மறை வாணர் புத்தூர்த் திகழ் ⋆
பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும் ⋆
பரவு மனநன் குடைப் பத்தர் உள்ளார் ⋆
பரமான வைகுந்தம் நண்ணுவரே ॥ **3.5.11** ॥

அடிவரவு — அட்டு வழு அம்மை கடு வானத்தில் செப்பாடு படங்கள் சலம் வன்பேய் கொடி அரவில் நாவலம்

அட்டுக்குவி முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்